5G 09.30 AM
NSDL
Technology, Trust & Reach
கட்டணமில்லா தொலைபேசி எண்
1800 222 990
வைப்புநிதிக்காக விவேகமுடைய
முதலீட்டாளரின்
கையேடு
ஸ்மார்ட்டாக
இருங்கள்
விவேகமாக
இருங்கள்
டீமேட்
எளிமையாக்கப்பட்டது

NSDL
Technology, Trust & Reach

பொருளடக்கம்

அ) அடிப்படைகளுடன் தொடங்கலாம் 2

1. சந்தை என்றால் என்ன?
2. முதலீட்டு பத்திரங்கள் என்றால் என்ன? முதன்மை மற்றும் இரண்டாம் நிலை சந்தைகள் என்பவை யாவை?
3. சந்தைகளில் என்.எஸ்.டி.எல் -இன் பங்கு என்ன?
4. எவ்வாறு ஒரு டீமேட் கணக்கைத் தொடங்குவது?
5. உங்கள் என்.எஸ்.டி.எல். டீமேட் கணக்கைக் கொண்டு நீங்கள் என்னவெல்லாம் செய்யலாம்?

ஆ) என்.எஸ்.டி.எல் டீமேட் கணக்குடன் வழங்கப்படுபவை 5

1. என்.எஸ்.டி.எல் ஸ்பீட்-இ சேவை
2. என்.எஸ்.டி.எல் கைப்பேசி செயலி மற்றும் ஐ.டி.இ .ஏ.எஸ் சேவை
3. என்.எஸ்.டி.எல் ஒருங்கிணைந்த கணக்கு அறிக்கை (சி.ஏ.எஸ்)
4. என்.எஸ்.டி.எல் இ-வாக்களிப்பு சேவை

இ) ஒரு விவேகமான முதலீட்டாளராக இருத்தல் 7

1. நீங்கள் ஒரு விவேகமான முதலீட்டாளராக இருப்பதை உறுதி செய்தல்
2. உங்கள் டீமேட் கணக்கை கவனித்துக் கொள்ளுதல்

ஈ. கூடுதல் விவரங்கள் 9

1. கிடைக்கப்பெறாத டிவிடண்ட் / பங்குகளுக்காக ஐ.இ .பி.எஃப் -மிடமிருந்து பணத்தை திரும்பக் கோருதல்
2. பங்கு பாத்திரங்களை மற்றொருவருக்கு மாற்றுவதற்கு டீமேட் கட்டாயமாகும்
3. பட்டியலிடப்படாத பொது நிறுவனங்களுக்கு டீமேட் கட்டாயமாகும்
4. முதலீட்டாளர் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள்
5. புகார்கள் தீர்த்தல்
6. பிற பயனுள்ள சேவைகள்

இந்த வெளியீடு, என்.எஸ்.டி.எல் முதலீட்டாளர் பாதுகாப்பு நிதி ட்ரஸ்டின் ஒரு முயற்சியாகும்.

NSDL
Technology, Trust & Reach

அன்பார்ந்த வாசகரே,

என்.எஸ்.டி.எல் மீதான உங்கள் ஆர்வத்துக்கு எங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.
நாங்கள், என்.எஸ்.டி.எல் -இல், ஒவ்வொரு இந்தியரும் வெறும் ஒரு முதலீட்டாளராக மட்டும் இல்லாமல், ஒரு 'விவேகமான முதலீட்டாளராக இருப்பார்கள் என நாங்கள் நம்புகிறோம். இந்தக் கையேட்டை படிக்க வேண்டும் என்ற உங்கள் முடிவை நாங்கள் பாராட்டுகிறோம், மற்றும் இதில் வழங்கப்பட்டுள்ள விவரங்கள் மூலம் நீங்கள் பயன் பெறுவீர்கள் என நாங்கள் உறுதியளிக்கிறோம். இந்த கையேட்டில் வழங்கப்பட்டுள்ள விவரங்கள், ஒரு 'விவேகமான முதலீட்டாளர்' ஆவதற்கான முதல் அடியை நீங்கள் எடுத்து வைப்பதற்கு உதவிகரமாக இருக்கும்.
என்.எஸ்.டி.எல் பற்றிய ஒரு சிறிய அறிமுகத்தைத் தவிர, நீங்கள் என்.எஸ்.டி.எல் டீமேட் கணக்கைத் தொடங்கியவுடனே உங்களுக்கு நாங்கள் அளிக்கக் கூடிய பல்வேறு சேவைகளைப் பற்றியும் சுருக்கமாக விவரித்துள்ளோம். ஒரு வேளை, உங்களுக்கு கூடுதல் விவரங்கள் அல்லது ஏதேனும் விளக்கம் தேவைப்பட்டால், தயக்கமின்றி எங்களைத் தொடர்பு கொள்ளவும்.

வாழ்த்துக்களுடன்,
என்.எஸ்.டி.எல் அணி

NSDL
Technology, Trust & Reach

அ. அடிப்படைகளுடன் தொடங்கலாம்

1) முதலீட்டு சந்தை என்றால் என்ன?

முதலீட்டு சந்தை, எளிய வார்த்தைகளில் கூறுவதென்றால், இது தங்கள் வியாபாரத் தேவைகளுக்காக நிதி தேவைப்படுபவர்கள், அவற்றை அளிக்க விரும்புகின்றவர்களைத் தேடுகின்ற, முதலீடு அல்லது நிதிகளுக்கான ஒரு சந்தையாகும். வேறு வார்த்தைகளில் கூறுவதென்றால், முதலீட்டு சந்தை என்பது, மக்கள் பல்வேறு வகையான நிதிசார் உபகரணங்களை வாங்குதல், மற்றும் விற்பனை செய்தலில் ஈடுபடும் ஒரு சந்தையாகும். இது ஒரு கட்டுப்பாட்டு அமைப்பு (செபி), பங்கு சந்தைகள் (என்.எஸ்.இ/பி.எஸ்.இ, இன்ன பிற.,) முதலீட்டகங்கள் (என்.எஸ்.டி.எல்/சி.டி.எஸ்.எல்) மற்றும், பங்கு தரகர்கள், டி.பி-க்கள், காப்பாளர்கள், வணிக வங்கியாளர்கள், இன்ன பிற இடைத்தரகர்கள் ஆகியோரை உள்ளடக்கியுள்ளது.

2) வைப்பு பத்திரங்கள் என்பவை என்ன? முதன்மை மற்றும் இரண்டாம் நிலை சந்தை என்பவை எதைக் குறிக்கின்றன?

வைப்பு பத்திரங்கள் என்பவை, முதலீட்டு சந்தைகளில் வணிகம் செய்யப்படும் பல்வேறு வகையான நிதிசார் உபகரணங்கள் ஆகும். வேறு வார்த்தைகளில் கூறுவதென்றால், நிதி வேண்டுவோருக்கு நிதியை அளிப்பவரால் அளிக்கப்படுகின்ற நிதிகளுக்கானவை இந்த உபகரணங்கள் ஆகும். இதைப் புரிந்து கொள்வதற்கு நாம் ஒரு எடுத்துக்காட்டைக் காணலாம். திரு.அ என்பவர் ஒரு பிரபலமான தொழில் முனைவோராகவும், ஏ.பி.சி லிமிடெட் நிறுவனத்தின் நிர்வாக இயக்குனராகவும் இருக்கிறார். அவர், ஏ.பி.சி லிமிடெட் பெயரில் ஒரு புதிய சிமெண்ட் தொழிற்சாலையை நிறுவ விரும்புகிறார். அதற்கு, அவராலோ அல்லது ஏ.பி.சி லிமிடெட் நிறுவனத்தாலோ திரட்ட இயலாத அளவுக்கு, மிகப் பெரிய அளவிலான பணம் (முதலீடு) தேவைப்படுகிறது. அதனால் அது, நிதியைத் திரட்டுவதற்காக அதன் சாதாரண பங்குகளை வெளியிடுவதன் மூலம், முதலீட்டு சந்தைக்குள் நுழையத் தீர்மானிக்கிறது. எனவே, அது ஆரம்ப கட்ட பொது அறிவிப்பு, அல்லது ஐ.பி.ஓ -உடன் (பெரிய அளவில் பொதுமக்களிடம் இருந்து நிதியை ஏ.பி.சி லிமிடெட் எதிர்நோக்குவது இது தான் முதல் முறை என்பதால் ஆரம்ப கட்டம்) வெளி வருகிறது. பொதுமக்கள் ஒரு ஒப்புக்கொள்ளப்பட்ட விலையை செலுத்துவதன் மூலமாகப் பங்குகளுக்கு விண்ணப்பிக்கலாம். தகுந்த நடைமுறைகள் நிறைவு பெற்ற பிறகு, நிறுவனம் தனது வங்கி கணக்கில் நிதிகளைப் பெற்று, விண்ணப்பதாரர்களுக்கு பங்குகளை வழங்கி, அவர்களை நிறுவனத்தின் பங்குதாரர்களாக்குகிறது.

மேலே விவரிக்கப்பட்ட பங்கு என்பது, பத்திரத்தின் ஒரு வகையாகும். மற்ற உதாரணங்களாக -கடன் பத்திரங்கள், ஒப்பந்த பத்திரங்கள், பரஸ்பர நிதி அலகுகள், வணிகரீதியான ஆவணங்கள், வைப்பு நிதிகளுக்கான சான்றிதழ்கள், அரசு பத்திரங்கள், இன்ன பிற., உள்ளன.

பொது மக்களுக்கு வெளியிடுபவர்களால் பங்குகள், அல்லது வைப்பு பத்திரங்கள் அளிக்கப்படுவது 'முதன்மை சந்தை' எனப்படுகிறது. ஏற்கனவே வெளியிடப்பட்டு, வணிகம் செய்யப்படும் பங்குகளில் வணிகம் செய்வதற்கான (வாங்குதல் மற்றும் விற்பனை செய்தல்) ஒரு சந்தை இடமான பங்கு சந்தையானது, 'இரண்டாம் நிலை சந்தை' என அழைக்கப்படுகிறது. பி.எஸ்.இ அல்லது என்.எஸ்.இ போன்ற பங்கு சந்தைகளால் அளிக்கப்படும் இயங்குதளத்தில் உள்ள செபியில் பதிவு செய்த ஒரு பங்கு தரகர் மூலமாக, எந்த பங்குதாரரும் தனது பங்குகளை விற்பனைக்கு வழங்கலாம். ஒப்புக் கொள்ளப்பட்ட விலையை செலுத்துவதன் மூலமாக, எந்த ஒரு நபரும் தனது பங்கு தரகர் மூலம் இந்தப் பங்குகளை வாங்கலாம்.

3) முதலீட்டு சந்தைகளில் என்.எஸ்.டி.எல் -இன் பங்கு என்ன?

என்.எஸ்.டி.எல், 1996 இல் நிறுவப்பட்ட இது, தற்போது உலகத்தில் உள்ள மிகப் பெரிய முதலீட்டகங்களில் ஒன்றாக இருக்கிறது. ஒரு முதலீட்டகமாக இது பங்குகள் மற்றும் வேறு வகையான பத்திரங்களை மின்னணு முறையில், அதாவது பருப்பொருள் அற்ற வடிவத்தில் வைத்திருக்கும் வசதியை அளிக்கிறது. ஒரு டீமேட் கணக்கை வைத்திருப்பதன் மூலமாக, ஒருவர் பத்திரங்களை மின்னணு வடிவத்தில் வைத்திருக்கவும், மற்றும் எந்த பத்திரத்தையும் அவர்/ அவளது கணக்கில் இருந்து வேறு டீமேட் கணக்குக்கு மாற்றவும் கூட முடியும்.

இந்திய முதலீட்டு சந்தைகளில் என்.எஸ்.டி.எல் -இன் பங்களிப்பானது, அதை உலக அளவில் பல்வேறு நிலைகளில் உள்ள முன்னணி நிதி சந்தைகளில் ஒன்றாக ஆக்கியுள்ளது. பல்வேறு பொருட்கள் மற்றும் சேவைகளுக்கான மிக உயர் நுணுக்க தொழில்நுட்பத்தைப் பின்பற்றுதல், மற்றும் இந்த தேசத்துக்குள் ஈடு-இணையற்ற அளவில் மக்களை சென்றடைதல் மூலம், முதலீட்டாளர்கள் மற்றும் பிற தரகு நிறுவனங்களின் நம்பிக்கையைப் பெற்று, அதன் மூலம் தனது டேக் லைன் - தொழில்நுட்பம், நம்பிக்கை & மக்களை சென்றடைதல் - மெய்யானது எனக் காட்டுகிறது.

என்.எஸ்.டி.எல் 278 க்கும் மேற்பட்ட டி.பி -க்களை(முதலீட்டாக பங்கேற்பாளர்கள்) கொண்டிருக்கும் தனது வலைக்கட்டமைப்பின் மூலமாக, முதலீட்டாளர்கள், பங்கு தரகர்கள், பங்கு சந்தைகள், காப்பாளர்கள், இன்ன பிறருக்கு, பல்வேறு சேவைகளின் மலர்க்கொத்தை வழங்குகிறது. பெரும்பாலான பெரிய வங்கிகள் (தேசியமயமாக்கப்பட்டவை, தனியார் மற்றும் கூட்டுறவு), பங்கு தரகர்கள் மற்றும் நிதிசார் நிறுவனங்கள் ஆகியவை டி.பி -க்களாக என்.எஸ்.டி.எல் -இல் இணைந்துள்ளன. என்.எஸ்.டி.எல் -இன் டி.பி- க்கள் நாடு முழுவதும் பரவியுள்ள 31,100க்கும் மேற்பட்ட சேவை மையங்களில் இருந்தும், சில வெளிநாடுகளிலும் கூட செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. என்.எஸ்.டி.எல் -இன் பங்கேற்பாளர்கள், மற்றும் அவர்களின் சேவை மையங்களின் பட்டியல், என்.எஸ்.டி.எல் இணையதளமான www.nsdl.co.in இல் கிடைக்கிறது.

4) எவ்வாறு ஒரு என்.எஸ்.டி.எல் டீமேட் கணக்கை தொடங்குவது?

ஒரு டீமேட் கணக்கைத் தொடங்குவது மிகவும் எளிதானது. நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம், நடைமுறைகளை நீங்கள் பூர்த்தி செய்ய உதவுகின்ற ஒரு என்.எஸ்.டி.எல் டி.பி யை அணுக வேண்டியது மட்டும் தான். நீங்கள் அடையாள சான்றையும், முகவரி சான்றையும் சமர்ப்பிக்க வேண்டும். மேலும், டீமேட் கணக்கு தொடங்குவதற்கு நிரந்தர கணக்கு எண் அவசியம் ஆகும். கூடுதலாக, உங்கள் வங்கி கணக்கு விவரங்களையும் நீங்கள் அளிக்க வேண்டி இருக்கும்.

உங்கள் டீமேட் கணக்கு தொடங்கப்பட்ட பிறகு, உங்களுக்கு உங்கள் டி.பி அடையாள எண், மற்றும் பயனாளர் அடையாள எண், உங்கள் டீமேட் கணக்கு தொடர்பான விவரங்கள், கட்டண விவரங்கள் மற்றும் பயன்பெறும் உரிமையாளர் மற்றும் முதலீட்டக பங்கேற்பாளரின் உரிமைகள் & பொறுப்புகள் ஆகியவற்றைக் கொண்டிருக்கும் பயனாளர் மாஸ்டர் அறிக்கை ஆகியவற்றை உங்கள் டி.பி வழங்குவார். உங்களது அனைத்து விவரங்களும் சரியாகப் பதிவு செய்யப்பட்டுள்ளன என்பதை உறுதி செய்து கொள்வதற்காக, பயனாளர் மாஸ்டர் அறிக்கையை நீங்கள் சரி பார்க்க வேண்டும். நீங்கள் பங்குகள், இன்ன பிறவற்றில் வணிகம் செய்ய விரும்பினால் (அதாவது, வாங்குதல் அல்லது விற்பனை செய்தல்), செபியில் பதிவு பெற்ற ஏதேனும் ஒரு தரகரைக் கொண்டு, ஒரு வணிக / தரகு கணக்கையும் நீங்கள் தொடங்க வேண்டியிருக்கும். முதலீட்டாளர்களின் நன்மைக்காக 1-இல்-3 ஏற்பாட்டினை வழங்குகின்ற பல வங்கிகள் உள்ளன (1-இல்-3 என்பது, டீமேட் கணக்கு, வணிக கணக்கு மற்றும் வங்கி கணக்கு மூன்றின் இணைப்பாகும்).

5) உங்கள் என்.எஸ்.டி.எல் டீமேட் கணக்கைக் கொண்டு நீங்கள் என்னவெல்லாம் செய்யலாம்?

உங்கள் என்.எஸ்.டி.எல் டீமேட் கணக்கைக் கொண்டு நீங்கள் செய்யக் கூடிய சில முக்கியமான விஷயங்கள் கீழே பட்டியலிடப்பட்டு உள்ளன –

I) நீங்கள் ஐ.பி.ஓ -க்கள் மற்றும் என்.எஃப்.ஓ-க்களுக்கு விண்ணப்பிக்கலாம். விண்ணப்ப படிவத்தில் உங்கள் அடையாள எண், மற்றும் பயனாளர் அடையாள எண்ணை சரியாகக் குறிப்பிட மறக்க வேண்டாம். ஒரே டீமேட் கணக்கை, பங்குகள் மற்றும் பிற வகை பத்திரங்களை வாங்க, மற்றும் வைத்திருக்கப் பயன்படுத்தலாம்.

II) உங்கள் டீமேட் கணக்கில் நிறுவனத்தின் அனைத்து நன்மைகளையும் (ஊக்கத்தொகை, உரிமைகள் வெளியீடு, இன்ன பிற.) நீங்கள் தானாகவே பெறுவீர்கள். உங்கள் நிறுவனத்தினால் அறிவிக்கப்பட்ட டிவிடெண்ட், வட்டி அல்லது உங்கள் பத்திர முதலீடுகளின் மீது அளிக்க வேண்டிய முதிர்வுத் தொகை போன்ற பணப் பலன்கள், உங்கள் டீமேட் கணக்குடன் இணைக்கப்பட்டிருக்கும் வங்கி கணக்கில் வரவு வைக்கப்படும். உங்கள் டீமேட் கணக்கில் சரியான வங்கி விவரங்கள் பதிவு செய்யப்பட்டு உள்ளதை உறுதி செய்து கொள்ளவும்.

III) உங்கள் நிதித் தேவைகளை பூர்த்தி செய்வதற்காக உங்கள் முதலீட்டு பங்குகளை விற்பனை செய்ய வேண்டிய அவசியம் இல்லாமல், பல வங்கிகளால் அளிக்கப்படும் 'பங்குகளின் மீது கடன்' வசதி, இன்ன பிற வசதிகளைப் பெற நீங்கள் உங்கள் டீமேட் கணக்கைப் பயன்படுத்தலாம்.

IV) உங்கள் டி.பி வாயிலாக, காகித வடிவத்தில் உள்ள உங்களுடைய பங்குகள், ஒப்பந்த பத்திரங்கள், கடன் பத்திரங்கள், அரசு பத்திரங்கள், அரசு தங்க முதலீடு பத்திரங்கள் மற்றும் அறிக்கை வடிவத்தில் உள்ள பரஸ்பர நிதி அலகுகள் ஆகிய அனைத்து முதலீடுகளையும் டீமேட் வடிவத்துக்கு மாற்றலாம்.

V) அதே டீமேட் கணக்கில் உங்கள் பரஸ்பர நிதி முதலீடுகளையும் நீங்கள் வைத்துக் கொள்ளலாம். டீமேட் கணக்கில் பரஸ்பர நிதி அலகுகளை வைத்துக் கொள்வது, உங்கள் வேலைகளை மிக எளிதானவையாக மாற்றுகிறது. என்.எஸ்.டி.எல் -சி.ஏ.எஸ் வழியாக ஒரே இடத்தில் உங்கள் ஆவணங்களைக் கண்காணிப்பது மட்டும் அல்லாமல், உங்கள் தனிப்பட்ட விவரங்கள், எடுத்துக்காட்டுக்கு, உங்கள் முகவரி அல்லது வங்கி விவரங்கள், அல்லது வாரிசுதாரர் போன்றவற்றில் ஏதேனும் மாறுதல்கள் செய்ய நீங்கள் விரும்பினால், அதற்காக பல்வேறு பரஸ்பர நிதியகங்களுடன் தொடர்பு கொள்ளும் தேவையில் இருந்தும் உங்களைக் காக்கிறது. விண்ணப்பப் படிவத்தில் உங்கள் டி.பி எண், மற்றும் பயனாளர் எண்ணை மட்டும் குறிப்பிடுவதன் மூலமாகவே, டீமேட் வடிவத்தில் நீங்கள் பரஸ்பர நிதி அலகுகளுக்கு சந்தாதாரர் ஆகலாம். டீமேட் கணக்கு மூலமாக, எஸ்.ஐ.பி வழிமுறையிலான பரஸ்பர நிதிகளில் முதலீடு செய்வதும் கூட இயலும். பரஸ்பர நிதி அலகுகள் மீதான மீட்பு அல்லது மறுகொள்முதலுக்கு, நீங்கள் உங்கள் டி.பி -க்கு ஒரு அறிவுறுத்தலை வழங்கலாம், அல்லது என்.எஸ்.டி.எல் -இன் ஸ்பீட்-இ வசதியைப் பயன்படுத்தலாம்.

VI) உங்கள் டீமேட் கணக்கு வழியாக உங்கள் பங்குகளை நிறுவனத்துக்கு விலைப்புள்ளி அளிப்பதன் மூலம், திரும்ப வாங்குதலில் நீங்கள் பங்கு பெறலாம்.

VII) உங்கள் டீமேட் கணக்கை இயக்குவதற்கு, நீங்கள் பரிந்துரைக்கப்பட்ட படிவத்தில் உங்கள் டி.பி- க்கு அறிவுறுத்தலை வழங்க வேண்டும். மாறாக, என்.எஸ்.டி.எல் -இன் ஸ்பீட்-இ சேவையைப் பயன்படுத்தி, எந்த இடத்திலும், எந்த நேரத்திலும் மின்னணு முறையில் உங்கள் டி.பி -க்கு நீங்கள் அறிவுறுத்தலை அளிக்க முடியும்.

Visit : nsdl.co.in/master_search.php

to find if physical securities are available for demat

ஆ) என்.எஸ்.டி.எல் டீமேட் கணக்குடன் அளிக்கப்படுபவை

1) என்.எஸ்.டி.எல் ஸ்பீட்-இ சேவை

ஸ்பீட்-இ சேவை (ஸ்பீடி என உச்சரிக்கப்படுகிறது) என்பது, என்.எஸ்.டி.எல் மூலம் வழங்கப்படுகின்ற, ஒரு இணையத்தை அடிப்படையாகக் கொண்ட சேவையாகும். இது, ஒரு டீமேட் கணக்கு வைத்திருப்பவருக்கு அளித்தல், அடமானம் வைத்தல் மற்றும் பரஸ்பர நிதி மீட்பு தொடர்பான விவரங்களை மின்னணு வடிவத்தில் பெறும் வசதியை அளித்து, அதன் மூலம் அந்த செயல்முறையை மிக விரைவாக, பாதுகாப்பாக மற்றும் திறனுடன் மேற்கொள்ள உதவுகிறது. அவருடைய/அவளுடைய டி.பி இந்த சேவையை வழங்கினால் அந்த டீமேட் கணக்கு வைத்திருப்பவர் இந்த சேவையைப் பெறலாம்.

மேலும் விவரங்களுக்கு, வருகை புரியவும்: https://eservices.nsdl.com/

2) என்.எஸ்.டி.எல் கைப்பேசி செயலி மற்றும் ஐ.டி.இ .ஏ.எஸ். சேவை

என்.எஸ்.டி.எல் அதன் முதலீட்டாளர்களுக்காக ஒரு கைப்பேசி செயலியை உருவாக்கியுள்ளது. எந்த இடத்திலும், எந்த நேரத்திலும் உங்கள் கைப்பேசி மூலமாக இருப்பு தொகைகளைப் பார்க்க, மற்றும் இ-ஓட்டிங்கில் பங்கு பெற, நீங்கள் என்.எஸ்.டி.எல் கைப்பேசி செயலியைப் பதிவிறக்கம் செய்து பயன்படுத்தலாம். இது கூகுள் பிளே ஸ்டோர், மற்றும் ஆப் ஸ்டோரில் முற்றிலும் இலவசமாகக் கிடைக்கிறது.

3) என்.எஸ்.டி.எல் இ-ஓட்டிங் சேவை

என்.எஸ்.டி.எல் -இன் மின்னணு ஓட்டெடுப்பு (இ-ஓட்டிங்) இயங்குதளம், கூட்டம் நடைபெறும் இடத்துக்கு நேரடியாக வர வேண்டிய அவசியம் இல்லாமல், அனைத்து பங்குதாரர்களும் தங்கள் ஓட்டுரிமையை இணைய வழியில் பெறும் வசதியை அளிக்கிறது. இ-ஓட்டிங் சேவையானது, ஸ்பீட்-இ, மற்றும் என்.எஸ்.டி.எல் கைப்பேசி செயலியுடன் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது.

மேலும் விவரங்களுக்கு, வருகை புரியவும்: https://evoting.nsdl.com/

IndiaBondInfo
ஒரே இடத்தில் பல்வேறு பாண்ட்கள் & கடன் பத்திரங்களின் விவரங்கள். :
https://www.indiabondinfo.nsdl.com

4) என்.எஸ்.டி.எல் ஒருங்கிணைந்த கணக்கு அறிக்கை (சி.ஏ.எஸ்)

i) ஒவ்வொரு டீமேட் கணக்கு வைத்திருப்பவருக்கும் அவருடைய/அவளுடைய அனைத்து டீமேட் கணக்கு(கள்) மற்றும் பரஸ்பர நிதி முதலீடுகளுக்குரிய ஒருங்கிணைந்த கணக்கு அறிக்கையை (சி.ஏ.எஸ்), கணக்கு அறிக்கைப் படிவத்தில் என்.எஸ்.டி.எல் அனுப்புகிறது.

II) அந்த மாதத்தில் ஏதேனும் ஒரு பரிவர்த்தனை மேற்கொள்ளப்பட்டு இருந்தால், ஒவ்வொரு மாதத்துக்கும் இந்த அறிக்கை அனுப்பப்படுகிறது. உங்கள் மின்னஞ்சல் முகவரி, மற்றும் அனுமதியை நீங்கள் உங்கள் டி.பி -க்கு அளித்து இருந்தால், இந்த அறிக்கை உங்களுக்கு மின்னஞ்சலில் அனுப்பி வைக்கப்படும்.

III) உங்கள் டீமேட் கணக்குகள் மற்றும் பரஸ்பர நிதி இருப்புகளில் உள்ள ஒவ்வொரு முதலீட்டின் அறிக்கை காலகட்டம், மற்றும் இறுதி இருப்பை பரிசோதிக்கவும்.

IV) உங்கள் ஒவ்வொரு முதலீட்டின் விலை, ஒருங்கிணைந்த போர்ட்போலியோ மதிப்பு, மற்றும் குறிப்பிட்ட காலகட்டத்தில் மொத்த போர்ட்போலியோவில் ஏற்பட்டுள்ள மாறுதல்களை காட்டுகின்ற வரைபடம் ஆகியவற்றையும் அறிக்கை காட்டுகிறது.

V) மேலும் இது, உங்கள் கே.ஒய்.சி தற்போதையதாக உள்ளதா, உங்கள் எம்.எஃப் குறிப்புகளில் குறிப்பிடப்பட்டிருக்கும் மின்னஞ்சல் முகவரி, மற்றும் கைப்பேசி எண் ஆகியவற்றையும் காட்டுகிறது. நீங்கள் ஏதேனும் முரண்பாட்டைக் கண்டாலோ, அல்லது உங்களுக்கு ஒரு தகவல் புதுப்பிப்பு செய்ய வேண்டியிருந்தாலோ, நீங்கள் பரஸ்பர நிதி நிறுவனம் அல்லது அதன் பதிவாளரைத் தொடர்பு கொள்ளலாம்.

VI) ஒருவேளை அறிக்கை கிடைக்கப்பெறவில்லை எனில் அல்லது அதில் ஏதேனும் முரண்பாட்டை நீங்கள் கண்டால், உடனடியாக உங்கள் டி.பி -யைத் தொடர்பு கொள்ளவும்.

VII) என்.எஸ்.டி.எல் டீமேட் கணக்கு வைத்திருப்பவர்கள், என்.எஸ்.டி.எல் -இடமிருந்து மின்னஞ்சல் மூலம் சி.ஏ.எஸ் அறிக்கையை (இ-சி.ஏ.எஸ்) பெறுவதற்காக, அவர்கள் நேரடியாக என்.எஸ்.டி.எல் -யிடம் மின்னஞ்சல் முகவரியை அளிப்பதற்காக, https://nsdlcas.nsdl.com/ -இல் என்.எஸ்.டி.எல் ஒரு இணையவழி வசதியை உருவாக்கியுள்ளது.

இ) ஒரு விவேகமான முதலீட்டாளராகத் திகழ்தல்

1) நீங்கள் ஒரு விவேகமான முதலீட்டாளர் என உறுதி செய்தல்.
ஒரு விவேகமான முதலீட்டாளர்...

- முதலீட்டு சந்தையில் எந்த ஒரு முதலீடு செய்வதற்கும், செபியில் பதிவு செய்த பங்கு தரகர், அல்லது அங்கீகரிக்கப்பட்டவரை மட்டுமே எப்போதும் தொடர்பு கொள்கிறார்.
- கையொப்பம் இடும் முன்னர் அனைத்து ஆவணங்களையும் கவனமாகப் படிக்கிறார்.
- கையொப்பமிடப்பட்ட ஆவணங்கள், கணக்கு அறிக்கைகள், பெறப்பட்ட ஒப்பந்த குறிப்புகள் மற்றும் செய்யப்பட்ட பணம் செலுத்தல்களின் ஒரு பதிவுக் குறிப்பை வைத்திருக்கிறார்.
- அவரது / அவளது இலக்குகள் மற்றும் போர்ட்போலியோவை குறிப்பிட்ட கால இடைவெளியில் மீள்பார்வை செய்கிறார்.
- திறன் வாய்ந்த கண்காணிப்புக்காக கைப்பேசி எண் மற்றும் மின்னஞ்சல் முகவரியைப் பதிவு செய்கிறார், மற்றும் கைப்பேசி செயலி, என்.எஸ்.டி.எல் இ-சி.ஏ.எஸ், ஐ.டி.இ.ஏ.எஸ் போன்ற என்.எஸ்.டி.எல் -இன் வசதிகளைப் பயன்படுத்துகிறார்.
- பரஸ்பர நிதிகள் தொடர்பான எந்த ஒரு சேவைக்கும், எப்போதும் ஏ.எம்.எஃப்.ஐ -யில் பதிவு செய்த பரஸ்பர நிதி விநியோகஸ்தரை மட்டுமே தொடர்பு கொள்கிறார்.
- எப்போதும் வங்கி வழி பரிவர்த்தனைகள் மூலமே முதலீடுகளை மேற்கொள்கிறார், அதாவது, ரொக்கத்தை கையாள்வது கிடையாது.

2) டீமேட் கணக்கைக் கவனித்துக் கொள்ளுதல்

உங்கள் டீமேட் கணக்கில் மதிப்புமிக்க முதலீடுகளை நீங்கள் வைத்துள்ளீர்கள். நீங்கள் என்.எஸ்.டி.எல் டீமேட் கணக்கின் பல்வேறு அம்சங்களைப் பயன்படுத்துகின்ற வேளையில், உங்கள் முதலீடுகள் பாதுகாப்பாக இருக்கின்றன என்பதை உறுதி செய்வதற்கு, கீழே பட்டியலிடப்பட்டுள்ள, குறிப்பிட்ட அடிப்படை விஷயங்களில் கவனம் செலுத்துவது மிகவும் முக்கியமாகும்.

I) உங்கள் தனிப்பட்ட விவரங்கள் (எடுத்துக்காட்டுக்கு, முகவரி), அல்லது உங்கள் டீமேட் கணக்குடன் இணைக்கப்பட்டிருக்கும் வங்கி கணக்கு விவரங்களில் ஏதேனும் மாறுதல்கள் இருந்தால், உடனடியாக பரிந்துரைக்கப்பட்ட படிவத்தில் உங்கள் டி.பி.-க்குத் தெரிவித்து, கணினியில் அந்த விவரம் மாற்றப்பட்டதற்கான உறுதிப்படுத்தலைப் பெற்றுக் கொள்ளவும்.

II) உங்கள் டீமேட் கணக்கில் வாரிசுதாரர் வசதியைப் பயன்படுத்தவும். ஒருவேளை கணக்கு வைத்திருப்பவர் இறக்க நேரிடும் பட்சத்தில், பங்குகளை மாற்றும் நடைமுறையை இது எளிதாக்கும். உங்கள் டீமேட் கணக்கில் 3 வாரிசுதாரர்கள் வரை நீங்கள் குறிப்பிடலாம். நீங்கள் விரும்பும் எந்த நேரத்திலும் வாரிசுதாரர்களின் பெயர்களை நீங்கள் மாற்றலாம்.

III) உங்கள் டீமேட் கணக்கை இயக்குவதற்கான பவர் ஆஃப் அட்டர்னியை அளிப்பதற்கு முன்னால், அளிக்கப்படும் அனுமதியினால் ஏற்படக் கூடிய நன்மை மற்றும் சிக்கல்களை கவனமுடன் ஆராயவும்.

IV) உங்கள் பயனாளர் எண்ணுடன், ஒவ்வொரு தாளிலும் வரிசை எண் முன்னரே-அச்சிடப்பட்டு இருந்தால் மட்டுமே, உங்கள் டி.பி -யிடமிருந்து வழங்கல் அறிவுறுத்தல் ஸ்லிப்பை (டி.ஐ.எஸ்) ஏற்று பெற்றுக் கொண்டு, அதைப் பாதுகாப்பான இடத்தில் வைக்கவும். எந்த ஒரு வெற்று படிவம் அல்லது டி.ஐ.எஸ் -இல் ஒருபோதும் கையொப்பமிட வேண்டாம். படிவத்தை முழுமையாக நிரப்பிய பிறகே கையொப்பம் இட வேண்டும் என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

V) என்.எஸ்.டி.எல் -யிடமிருந்து நேரடியாக குறுஞ்செய்தி தகவல்கள் மற்றும் தொடர்ந்த புது தகவல்களைப் பெறுவதற்கு, கணக்கு துவங்கும் படிவத்தில் உங்கள் மின்னஞ்சல் முகவரி மற்றும் கைப்பேசி எண்ணைக் குறிப்பிடவும். இந்த வசதி எந்தவித கட்டணமுமின்றி உங்களுக்கு இலவசமாகக் கிடைக்கிறது. உங்கள் கைப்பேசி எண் அல்லது மின்னஞ்சல் முகவரியை நீங்கள் மாற்றும் பட்சத்தில், பரிந்துரைக்கப்பட்ட முறையில் உங்கள் டி.பி -க்கு உடனடியாகத் தெரிவித்து, கணினியில் அந்த விவரம் மாற்றப்பட்டதற்கான உறுதிப்படுதலைப் பெறவும். இது, என்.எஸ்.டி.எல் -லிடமிருந்து தொடர்ந்து நீங்கள் தகவல்களைப் பெறுவதை உறுதி செய்யும்.

VI) என்.எஸ்.டி.எல் -இடமிருந்து நேரடியாக மின்னஞ்சல் மூலமாக உங்கள் அனைத்து முதலீடுகளின் ஒருங்கிணைந்த அறிக்கையைப் பெறுவதற்கு, https://nsdl.co.in/e-newsletter.php -இல் என்.எஸ்.டி.எல் இ-சி.ஏ.எஸ் -க்கு சப்ஸ்கிரைப் செய்யவும்.

VII) என்.எஸ்.டி.எல் -இன் பல்வேறு பொருட்கள் / சேவைகள் மற்றும் முதலீட்டக அமைப்பின் பிற முக்கிய அம்சங்களைப் பற்றி தொடர்ந்து நீங்கள் அறிந்து வைத்திருப்பதற்காக, என்.எஸ்.டி.எல் 'தி பைனான்சியல் கலைடாஸ்க்கோப்' எனும் ஒரு மாதாந்திர செய்தித்தாளை வெளியிடுகிறது.

https://nsdl.co.in/e-newsletter.php -இல் உங்கள் மின்னஞ்சல் முகவரியை அளிப்பதன் மூலம், இப்பொழுதே அதற்கு சந்தாதாரர் ஆகுங்கள்.

ஈ. கூடுதல் விவரங்கள்

1. பெறப்படாத டிவிடெண்ட் / பங்குகளுக்காக ஐ.இ.பி.எஃப் -இடமிருந்து பணத்தைத் திரும்பக் கோருதல்

எந்த ஒரு காரணத்துக்காகவும் தொடர்ந்து ஏழு வருடங்களுக்கு செலுத்தப்படாமல், அல்லது கோரப்படாமல் இருக்கின்ற அனைத்து டிவிடெண்ட்கள் மற்றும் பங்குகள், அதற்குரிய நிறுவனங்களால் முதலீட்டாளர் கல்வி மற்றும் பாதுகாப்பு நிதிக்கு (ஐ.இ.பி.எஃப்) மாற்றப்படும். ஐ.இ.பி.எஃப் அதிகார அமைப்பானது, நிறுமங்கள் சட்டம், 2013 இன் விதிகளின் கீழ் உருவாக்கப்பட்ட ஒரு சட்டப்பூர்வ அமைப்பாகும். அளிக்கப்படாத டிவிடெண்ட் மற்றும்/அல்லது கோரப்பப்படாத பங்குகளைப் பெறுவதற்கு முதலீட்டாளர் அல்லது அவர் / அவளால் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதி, ஐ.இ.பி.எஃப் அதிகார அமைப்பிடம் கோருதலை சமர்ப்பிக்க வேண்டும். கோருபவர் ஐ.இ.பி.எஃப் -5 படிவத்தை பதிவிறக்கம் செய்து, பூர்த்தி செய்து, அதை இணைய வழியில் ஐ.இ.பி.எஃப் அதிகார அமைப்புக்கு பதிவேற்றம் செய்ய வேண்டும். மேலும், இணையவழியில் உருவாக்கப்பட்ட கோருதல் படிவம் மற்றும் ஒப்புகை அச்சிடப்பட்டு, உரிய நிறுவனத்தால் நியமிக்கப்பட்ட திட்ட அதிகாரியிடம் பருப்பொருள் வடிவத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும். கோருதலைப் பரிசீலித்த பிறகு, நிறுவனம் ஐ.இ.பி.எஃப் அதிகார அமைப்புக்கு கோருதலை உறுதிப்படுத்திய பின்னர், மின்னணு பரிவர்த்தனை மூலமாக கோருபவருக்கு அவர் /அவளின் இணைக்கப்பட்டுள்ள வங்கி கணக்கில் பணம் திரும்ப செலுத்தப்படும். கோருதல் பங்குகளுக்காக இருக்கும் பட்சத்தில், அவை கோருதல் படிவத்தில் குறிப்பிடப்பட்டு இருக்கும் முதலீட்டாளரின் டீமேட் கணக்கில் வரவு வைக்கப்படும். ஒரு விண்ணப்பதாரர், ஒரு நிதி ஆண்டில் ஒவ்வொரு நிறுவனத்துக்கும் ஒரு கோருதலைத் தாக்கல் செய்யலாம்.

இது பற்றிய மேலும் விவரங்களுக்கு வருகை புரியவும் http://www.iepf.gov.in/, அனைத்து நிறுவனங்களும் கோரப்படாத பங்குகள், மற்றும் டிவிடெண்ட்கள் பற்றிய விவரங்களைத் தங்கள் இணையதளத்தில் வெளியிடுவது அவசியம் என்பதை அறிந்து கொள்வது மிகவும் முக்கியமானதாகும்.

2.வைப்பு பத்திரங்களை வேறொருவருக்கு மாற்றுவதற்கு டீமேட் கட்டாயம்

பட்டியலிடப்பட்ட நிறுவனத்தின் பத்திரங்களுடைய எந்த ஒரு பரிவர்த்தனையும் டீமேட் வடிவத்தில் மட்டுமே இருக்க வேண்டும் என்பதை ஏப்ரல் 1, 2019 லிருந்து செபி கட்டாயமாகியுள்ளது. நீங்கள் ஒரு பட்டியலிடப்பட்ட நிறுவனத்தின் பங்குகளை காகித வடிவத்தில்

வைத்திருந்து, அதை வேறு ஒருவருக்கு மாற்ற விரும்பினால், ஏப்ரல் 1, 2019 லிருந்து, அவற்றை நீங்கள் டீமேட் வடிவத்துக்கு மாற்றிய பிறகு மட்டுமே அவ்வாறு செய்ய இயலும். இந்த தேதியில் இருந்து பங்குகள் மற்றும் இன்ன பிறவற்றுக்கு, செலுத்துதல் (அதாவது பங்குதாரர் மரணமடையும் பட்சத்தில் பங்குகளை மாற்றுதல்), மற்றும் மாற்றி வைத்தல் (அதாவது பங்குதார்களின் பெயர்களுக்காக மாற்றுதல்) மட்டுமே காகித வடிவத்தில் அனுமதிக்கப்படும். அதனால் கூடிய விரைவில் ஒரு டீமேட் கணக்கைத் தொடங்கி, உங்கள் பங்குகளை டீமேட் வடிவத்தில் மாற்றுவது நன்மைகரமானதாகும்.

3. பட்டியலிடப்படாத பொது நிறுவனங்களுக்கு டீமேட் கட்டாயம்

செப்டம்பர் 10, 2018 இல், பெருநிறுவனங்கள் விவகாரங்களுக்கான அமைச்சகம், பட்டியலிடப்படாத பொது லிமிடெட் நிறுவனங்கள் ஏமவைப்பு பாதுகாப்பு அமைப்பில் இணைய வேண்டும், மற்றும் அவர்களின் பங்குகளை டீமேட் வடிவத்தில் கிடைக்குமாறு செய்ய வேண்டும் என ஒரு அறிவிப்பை வெளியிட்டுள்ளது. இதற்கு பின்பாக நிறுவனங்களின் பங்கு வெளியீடுகள் டீமேட் வடிவத்தில் மட்டும் சாத்தியமாக இருக்கும். இந்த இரண்டும், அக்டோபர் 2, 2018 முதல் அமலுக்கு வருகிறது. முதலீட்டாளர்களின் பார்வையில், அவர்கள் வைத்திருக்கும் இது போன்ற பட்டியலிடப்படாத நிறுவனங்களின் பங்குகளை இப்பொழுது டீமேட் வடிவத்தில் மாற்றி, அதனுடன் இணைந்த பலன்களைப் பெறலாம். நீங்கள் ஏற்கனவே ஒரு டீமேட் கணக்கை வைத்திருந்தால், இந்த பங்குகளை வைத்துக் கொள்ள மற்றொரு டீமேட் கணக்கை நீங்கள் தொடங்க வேண்டிய அவசியமில்லை என்பதைக் கவனித்திருக்கலாம். காகித வடிவத்தில் நீங்கள் வைத்திருக்கின்ற உங்கள் முதலீடுகளை, வைத்திருக்கும் அதே வகைமுறையில், அதே டீமேட் கணக்கில் டீமேட் வடிவத்துக்கு மாற்றிக் கொள்ளலாம்.

4. முதலீட்டாளர் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள்

என்.எஸ்.டி.எல், நாடு முழுவதும் முதலீட்டாளர் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை ஒருங்கிணைக்கிறது. அந்த நிகழ்ச்சிகளின் கால அட்டவணைகள் https://nsdl.co.in/Investor-Awareness-Programmes.php யில் கிடைக்கின்றன. உங்கள் ஊரில், குடியிருப்பு வளாகத்தில், கல்லூரியில், நிறுவனத்தில் முதலீட்டாளர் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை ஒருங்கிணைக்க நீங்கள் விரும்பினால், info@nsdl.co.in -யில் எங்களுக்கு எழுதவும்.

5. புகார் தீர்த்து வைத்தல்

உங்கள் டீமேட் கணக்கு தொடர்பாக உங்களுக்கு ஏதேனும் புகார் இருந்தால் relations@nsdl.co.in இல் எங்களுக்கு எழுதவும், அல்லது அதை இணையவெளியில் https://scores.gov.in/scores/Welcome.html யில் செபியில் தாக்கல் செய்யலாம்.

6.ஒரு என்.எஸ்.டி.எல் -இன் 100% துணை நிறுவனமான என்.டி.எம்.எல், பிற பயன்மிக்க சேவைகள்

I) என்.எஸ்.ஆர் (தேசிய திறன்கள் பதிவேடு): என்.எஸ்.ஆர் என்பது, இந்தியாவில் உள்ள ஐ.டி & ஐ.டி.இ.எஸ் /பிபிஓ தொழில்துறையில் பணி புரியும் பணியாளர்களாக உள்ள மற்றும் எதிர்பார்க்கக் கூடிய நபர்களின் விவரங்களைக் கொண்டிருக்கும் ஒரு இணைய-அடிப்படையிலான அமைப்பாகும். இது ஒரு நாஸ்காம் முன்னெடுப்பு. மேலும் விவரங்களுக்கு வருகை புரிக https://nationalskillsregistry.com/

II) கே.ஒய்.சி பதிவு முகமை: முதலீட்டாளர்களின் மையப்படுத்தப்பட்ட கே.ஒய்.சி ஆவணங்களை பதிவேற்றுகிறது மற்றும் பதிவிறக்குகிறது. மேலும் விவரங்களுக்கு வருகை புரியவும்https://kra.ndml.in/

III தேசிய கல்வி ஆவண சேமிப்பகம் (என்.ஏ.டி): அங்கீகரிக்கப்பட்ட கல்வி சான்றிதழ்களை, மாணவர்கள், சரிபார்ப்பவர்கள் மற்றும் கல்வி நிறுவனங்களுக்கு கிடைக்கும் வகையில் மின்னனு முறைக்கு மாற்றுகிறது.மேலும் விவரங்களுக்கு வருகை புரியவும் https://nad.ndml.in/

IVஎன்.ஐ.ஆர் கணக்கு (இ-காப்பீட்டு கணக்கு): என்.எம்.டி.எல், காப்பீட்டு ஒழுங்கு ஆணையம் மற்றும் இந்திய வளர்ச்சி ஒழுங்கு ஆணையத்தின் சார்பில், ஒரு காப்பீட்டு ஏமநிதி அமைப்பை நிறுவி உள்ளது. அது, ஒரு ஒற்றை இ-காப்பீட்டு கணக்கில் மின்னணு வடிவத்தில் அனைத்து வகையான காப்பீட்டு பாலிஸிகளை வைத்திருக்கும் வசதியையும், ஒரு ஒற்றை உள் நுழைதலைக் கொண்டு அனைத்து காப்பீட்டு பாலிஸிகளையும் அணுகும் வசதியையும் அளிக்கிறது. இந்த கணக்கை இலவசமாகத் தொடங்கலாம். மேலும் விவரங்களுக்கு வருகை புரியவும் https://www.nir.ndml.in/

NATIONAL SECURITIES DEPOSITORY LIMITED

NSDL
Technology, Trust & Reach

பின்னூட்ட படிவம்

(நீங்கள் எங்கள் முதலீட்டாளர் விழிப்புணர்வு நிகழ்ச்சியில் பங்கு பெறும் பட்சத்தில், இந்தப் படிவம் பயன்படுத்தப்படுகிறது)

தேதி: DD MM YYYY **இடம்**

நிகழ்ச்சி விவரங்கள்	மோசம்	சுமார்	நன்று	மிக நன்று
இந்த நிகழ்ச்சிக்காக செய்யுப்பட்ட ஏற்பாடுகள் உங்களுக்கு எந்த அளவுக்குப் பிடித்திருந்தது?				
கொடுக்கப்பட்ட மூலப் பொருளின் தரம்				
பகுதி 1 க்கான பயிற்சியாளர் மதிப்பாய்வு - பெயர்:				
அ. துறை பற்றிய அறிவு				
ஆ. தகவல் தொடர்பு & வெளிப்படுத்தல்				
இ. பார்வையாளர்களுடன் உரையாடல்				
பகுதி 2 க்கான பயிற்சியாளர் மதிப்பாய்வு - பெயர்:				
அ. துறை பற்றிய அறிவு				
ஆ. தகவல் தொடர்பு & வெளிப்படுத்தல்				
இ. பார்வையாளர்களுடன் உரையாடல்				

- **இந்த முதலீட்டாளர் விழிப்புணர்வு மாநாடு பற்றி உங்களுக்கு எவ்வாறு தெரிய வந்தது? பொருத்தமான பெட்டியில் டிக் குறி இடவும்.**

☐ மின்னஞ்சல் ☐ குறுஞ்செய்தி ☐ செய்தித்தாள் ☐ மற்றவை ____________

- **நிகழ்ச்சியை மேலும் சிறப்பாக்குவதற்கு உங்களுடைய ஆலோசனை?**

- **எங்கள் செய்தித்தாளான 'தி பைனான்சியல் கலைடாஸ்கோப்' ஐ பெற நீங்கள் விரும்பினால் உங்கள் மின்னஞ்சல் முகவரியைக் குறிப்பிடவும்**

பெயர் ____________________ கைப்பேசி எண் ____________________

NATIONAL SECURITIES DEPOSITORY LIMITED

NSDL
Technology, Trust & Reach

(இந்த படிவத்தைப் பூர்த்தி செய்து எங்களிடம் ஒப்படைக்கவும் /அனுப்பவும்)

உங்களிடம் ஒரு டீமேட் கணக்கு உள்ளதா?

☐ ஆம் ☐ இல்லை

இல்லை எனில், ஒரு டீமேட் கணக்கைத் தொடங்க நீங்கள் விரும்புகிறீர்களா?

☐ ஆம் ☐ இல்லை

ஆம் எனில், ஒரு டீமேட் கணக்கைத் தொடங்குவதற்காக எங்கள் டி.பி -க்களில் ஒருவர் உங்களைத் தொடர்பு கொள்வதை நீங்கள் விரும்புகிறீர்களா?

☐ ஆம் ☐ இல்லை

உங்கள் பரஸ்பர நிதி அலகுகளை டீமேட் வடிவத்துக்கு மாற்றிக் கொள்ளலாம் என்பது உங்களுக்குத் தெரியுமா?

☐ ஆம் ☐ இல்லை

பரஸ்பர நிதி அலகுகளை நேரடியாக டீமேட் வடிவத்தில் வாங்கலாம் என்பது பற்றி நீங்கள் அறிந்துள்ளீர்களா?

☐ ஆம் ☐ இல்லை

டீமேட் வடிவத்தில் உள்ள உங்களுடைய அனைத்து முதலீடுகள் மற்றும் பரஸ்பர நிதி அலகுகளின் விவரங்களைக் கொண்டிருக்கும் ஒரு ஒருங்கிணைந்த கணக்கு அறிக்கையை என்.எஸ்.டி.எல் அனுப்புகிறது என்பது உங்களுக்குத் தெரியுமா?

☐ ஆம் ☐ இல்லை

என்.எஸ்.டி.எல் -இன் முதலீட்டாளரை மையப்படுத்திய பொருட்கள் & சேவைகள்

I) ஐ.டி.இ.ஏ.எஸ்

இணையவழியில் புதுப்பிக்கப்பட்ட கையிருப்புகள் மற்றும் மதிப்புகளை முதலீட்டாளர்கள் பார்வையிடும் வசதி.
இந்த கியூ.ஆர் கோடை ஸ்கேன் செய்யவும் அல்லது கீழேயுள்ள இணைப்பில் வருகை தரவும்.
https://eservices.nsdl.com/

ii) என்.எஸ்.டி.எல் கைப்பேசி செயலி

உடனடியாக எந்த நேரத்திலும், எந்த இடத்திலும் இருப்பு அறிக்கையைப் பார்ப்பதற்கான கைப்பேசி செயலி. இந்த செயலியைப் பதிவிறக்க கியூ.ஆர் குறியீட்டை ஸ்கேன் செய்யவும். கூகுள் பிளே ஸ்டோர் மற்றும் ஆப் ஸ்டோரில் கிடைக்கிறது. பிளே ஸ்டோருக்கு

பிளே ஸ்டோருக்கு

https://play.google.com/store/apps/details?id=com.msf.NSDL.Android

ஆப் ஸ்டோருக்கு

https://itunes.apple.com/in/app/nsdl/id922834763?mt=8

iii) தேசிய காப்பீட்டு சேமிப்பகம் (என்.ஐ.ஆர்)

அனைத்து காப்பீட்டு பாலிசிகளையும், அதாவது, ஆயுள் மற்றும் ஆயுள் இல்லாத மற்ற காப்பீடுகளையும் ஒரே இடத்தில் வைத்திருப்பதற்கான இலவச இ-காப்பீட்டு கணக்கு.
இன்றே ஒரு இலவச இ-காப்பீட்டு கணக்கைத் துவங்குங்கள்!
கியூ.ஆர் குறியீட்டை ஸ்கேன் செய்யவும் அல்லது கீழேயுள்ள இணைப்பில் வருகை புரியவும்
https://nironline.ndml.in/NIR/onlineEiaApplicationFormEkyc.html

iv) தேசிய கல்வி ஆவண காப்பகம் (என்.ஏ.டி)

கல்வி சான்றிதழ்களை பார்ப்பதற்கான இலவச இணையவழி மாணவர் கணக்கு. இன்றே ஒரு இலவச என்.ஏ.டி கணக்கைத் தொடங்குங்கள்!
கியூ.ஆர் குறியீட்டை ஸ்கேன் செய்யவும் அல்லது கீழேயுள்ள இணைப்பில் வருகை புரியவும்
https://nad.ndml.in/NAD/newStudentRegistrationScreen.html

குறிப்புகள்

தலைமை அலுவலகம்

மும்பை

4 வது தளம், 'A' பிரிவு, ட்ரேட் வேர்ல்டு, கமலா மில்ஸ் வளாகம்,
சேனாபதி பாபட் மார்க், லோயர் பேரல், மும்பை -400013
தொலைபேசி: (022) 2499 4200 மின்னஞ்சல்: info@nsdl.co.in

கிளை அலுவலகங்கள்

அஹமதாபாத்

402, 4 வது தளம், ஹெறிடேஜ் ஹாரிசோன், சி.ஜி. சாலை எதிர்புறம், நவரங்புரா,
அஹமதாபாத்-380009. தொலைபேசி: (079) 2646 1375

பெங்களூரு

அலுவலக எண் 106, டி.பி.எஸ் இல்லம், 26, கன்னிங்காம் சாலை,
பெங்களூரு – 560052 தொலைபேசி: (080) 4040 7106

சென்னை

6A, 6 வது தளம், கென்செஸ் டவர்ஸ், #1 ராமகிருஷ்ண தெரு, வடக்கு உஸ்மான் சாலை,
தி.நகர், சென்னை-600017. தொலைபேசி: (044) 2814 3911 / (044) 2814 3917

ஹைதராபாத்

அலுவலக எண் 123, ஹைதராபாத் ரீகஸ் மிட்-டவுன், 1 வது தளம், மிட் டவுன் பிளாசா,
சாலை எண் 1, பஞ்சாரா ஹில்ஸ், ஹைதராபாத் -500033. தொலைபேசி: (040) 4433 4178

கொச்சி

அறை எண். S -105, மோன்லாஸ் வணிக மையம், 4 வது தளம், க்ரெசென்ஸ் டவர்,
என்.எச் 47, சிங்கம்புழா நகர் அஞ்சல், கொச்சி - 682033. தொலைபேசி: (0484) 2933 075

கொல்கத்தா

யூனிட் 2E, 2 வது தளம், தி மில்லேனியம், 235/2A, A.J.C. போஸ் சாலை,
கொல்கத்தா -700020. தொலைபேசி: (033) 2290 4243 / (033) 2290 4246

புது டெல்லி

யூனிட் எண் 601,603,604, 6 வது தளம், டவர் - A, நவுரங் இல்லம், கஸ்தூரிபாய் காந்தி
மார்க், கொன்னவுட் பிளேஸ், புது டெல்லி. தொலைபேசி: (011) 2335 3814 / (011) 2335 3815

முதலீட்டாளர் தொடர்பு அமைப்பு
மின்னஞ்சல்: relations@nsdl.co.in

November - 2019

முதலீட்டாளர் உதவி தொலைபேசி எண்
(கட்டணம் அற்றது): 1800 222 990

www.nsdl.co.in